IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 1974ம் ஆண்டு வாங்கப்பட்ட சொத்தின் போது அந்த பத்திரத்தில் உயில் படி வந்த சொத்து என்று சொல்லப்பட்டு இருப்பது எனது தந்தையாருக்கு தெளிவாக தெரியும் என்றால் தெரியாது, உயில் போலியாக உருவாக்கப்பட்டது ஆகும் அதுபோன்று மேற்படி பத்திரமும் போலியாக உருவாக்கப்பட்டதாக இருக்கலாம்.

2. 1974 முதல் 1993ம் ஆண்டு வரை வாங்கப்பட்ட சொத்தில் என் அப்பா சுவாதீனத்தில் இருந்து வந்து மீண்டும் அதே சொத்தை வாங்கிய ஆதியம்மாளிடம் அவர்களிடம் விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா 28.11.2003ல் இறந்துவிட்டார். அதன்பிறகு வாரிசு என்ற அடிப்படையில் நாங்கள் 5 பேரும் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறோம்.

3. மேற்படி சொத்தானது 3 ஏக்கர் 45 செண்ட் அளவுள்ள சொத்தானது செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைக்கப்பட்ட சொத்தாகும். மேற்படி 3 ஏக்கர் 45 செண்ட் சொத்திற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேலும் 3 ஏக்கர் 45 செண்ட் உட்பட கூடுதலாக

கிணற்றில் பொதுவில் 1/3 பாகம் செட்டில்மெண்ட் மூலம் எழுதிவைக்கப்பட்டது. மேற்படி விவரங்களை அதாவது பொதுவில் கிணற்றில் 1/3 பாகம் என்பதை தாவா சொத்தின் அட்டவணை சொத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. 1974 லேயே என் அப்பாவிற்கு உயிலைப்பற்றி நன்றாக தெரியும் என்றாலும் 2003 ல் என் அப்பா இறந்தபிறகு மேற்படி சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் எங்களை வந்து சேர்ந்தது என்றால சரிதான். அப்படி இருக்கும் போது 2003–லேயே மேற்படி உயிலைப்பற்றி எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.173/2012 என்ற வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் எனக்கு தெரியவந்தது.

5. அ.வ.எண்.170/2000 என்ற வழக்கினுடைய தீர்ப்பு நகல் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி வழக்கில் என் தகப்பனார் மீது அவருடன் பிறந்த இரண்டு சகோதரர்களில் விஸ்வநாதன் என்பவர் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் சரிதான். ஆனால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கு நடக்கும்போது என் தந்தையாருக்கு உயிலைப்பற்றி நன்றாக தெரியும் என்றால் சரியல்ல.

6. உயில் செல்லாது என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது கால வரையறைச்சட்டத்திற்குள் அதாவது 12 ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யப்படாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.173/2012 என் வழக்கிற்கு பிறகுதான் எனக்கு மேற்படி உயிலைப்பற்றி எனக்கு தெரியவந்தது.

7. 2 ஏக்கர் 82 செண்ட் செட்டில்மெண்ட் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 10 செண்ட் பொதுவாக ஒதுக்கப்பட்டுள்ளது அதில் உள்ள கிணறு, கிணற்று மேடு, தண்ணீர் பாய்ச்சக்கூடிய வாய்க்கால், EB Deposit மற்றும் HP Motor ஆகியவற்றில் 1/3 பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. EB Deposit Service Connection No.082030137 என்பது விஸ்வநாதன் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அது ராஜீமேஸ்திரி பெயரில்தான் உள்ளது.

8. செட்டில்மெண்ட் படி சர்வே எண்.285/2ல் எனக்கு 1 ஏக்கர் 50 செண்ட் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. எனக்கு 1 ஏக்கர் 60 செண்ட் கொடுக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் கிணற்றில் 1/3 பாகம் என்ற கணக்கின் அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி 10 செண்ட் தனியாக ஒதுக்கப்பட்டது செட்டில்மெண்ட் படி கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.288–ல் செட்டில் செய்யப்பட்டதில் கிணறு, கால்வாய், பம்ப்செட், 7.5 HP Electric Motor, EB Deposit, கிணறு மேடு ஆகியவற்றில் 1/3 பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று என்னுடைய வழக்குரையில் பத்தி எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. மேற்படி இரண்டு செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 1 ஏக்கர் 50 செண்ட் சர்வே எண்.285/2–ல் ஒதுக்கப்பட்டுள்ளது, சர்வே எண்.276/1–ல் 1 ஏக்கர் 37 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது, சர்வே எண்.285/1ஏ–ல் 85 செண்ட் செட்டில்மெண்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தாவின் மூலப்பத்திரத்தில் சர்வே எண்.276/1–ல் 1 ஏக்கர் 37 செண்ட் என்பதே சொல்லப்படவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை, ஆனால் எனக்கு கொடுக்கப்பட்ட

பத்திரத்தில் 1 ஏக்கர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் ராஜீமேஸ்திரியின் சொத்துக்களில் பிரதிவாதிக்கு தரப்பட்டுள்ள சொத்துக்களையும் சேர்த்து அனுபவிப்பதற்காக சர்வே எண்.276/1ல் 1.37 செண்ட் இருந்ததாக செட்டில்மெண்டில் கூறியுள்ளது தவறு என்றாலும் மேற்படி செட்டில்மெண்டை ராஜீமேஸ்திரி எங்களுக்கு எழுதிக்கொடுத்திருக்க முடியாது என்றாலும் சரியல்ல (வாதியின் வழக்கறிஞர் மேற்படி ஆவணமானது 30 ஆண்டுகளுக்கு மேலான ஆவணம் என்பதால் பிரதிவாதியால் ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து கேள்வி கேட்க முடியாது என்று ஆட்சேபனை செய்கிறார்).

11. அதேபோல் சாம்பசிவம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கும் சர்வே எண்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ள விஸ்தீரணங்கள் ராஜீமேஸ்திரியின் மூலப்பத்திரத்திற்கும் செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI